

யாழ். நல்லூரடியைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரம் வடக்கு, சக்திபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி. அருமைரெத்தினம் புவனேஸ்வரி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

31ம் நாள்

# நினைவு மலர்


02.02.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ் நல்லூர் அடியை பிறப்பிடமாகவும்
உருத்திரபுரம் வடக்கு சக்திபுரத்தை வதிவிடமாகவும்
கொண்ட உயர் சைவ வேளாளர் குலத்தில் பிறந்த

அமரர்

# அருமைரெத்தினம்.புவனேஸ்வரி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவுமலர்

## 02.02.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குடும்ப ஒளி விளக்காய் திகழ்ந்து
எம்மை நல்வழிப்படுத்தி
எல்லோருக்கும் நல்லவ ராய்
உயர்வான பண்பாளராய்
இன்முகத்தோடும் புன்சிரிப்போடும்
அன்புடனும் பண்புடனும்
வாழ்ந்து சிறந்து விளங்கி
இன்று வான் உறையுள்
தெய்வமாகி விட்ட எங்கள் ஆருயிர்
தெய்வத்தின் திருப்பாத கமலங்களுக்கு
இம்மலரை சமர்ப்பணம்
செய்கின்றோம்.

என்றும் அவர் நினைவில்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவுடன்...



தோற்றம்
11.04.1938

மறைவு
03.01.2020

அமரர்

# திருமதி.அருமைரெத்தினம் புவனேஸ்வரி

## திதி நிருணய வெண்பா

விகாரிவருட மார்கழித்திங்கள் 18ம்நாள்
அமரபக்க அட்டமி திதியில் களங்கமற்ற
நல்லாள் புவனேஸ்வரி பெருமகளார் மண்ணக
வாழ்வகன்று பரமபதம் சேர்ந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

பெற்ற தாய்தனை மகன் மறந்தாலும்
பிள்ளையைப் பெற்ற தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகங்களை மறந்தாலும்
கண்களை நின்றிமைப் பது மறந்தாலும்
நற்ற வந்தவர் உள்ளிருந்த தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய் பரந்த எம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரோடு நோகேன் யார்க்கெடுத்துரைப்பேன்
ஆண்ட நீ அருளில்லை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவனே போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா
அன்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடி எம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி உமைமணவாளனுக்(கு) ஆட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர் காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்து அருளப் பெறற பேறிதனால்
என்றைக்கும் திருவருள் உடையோம்
நன்றியில் வேந்தனும் உயர்ந்து
வெண்றி கொள் திருநீற்று ஒளியினிலேல்
வழங்கும் மேன்மையும் படைத்தனம் என்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சக்திச் சரவண
முத்திக் கொரு வித்துக் குருபர..... எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும்...... அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில்.....இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொரு ரட்சித் தருள்வதும்...... ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தம்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு..... கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத்தொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக.... எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகு
குத்திப்புதை புக்குப்பிடியென.... முதுகூகை
கொட்டிப்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஏத்துப் பொரவல..... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

ஆறிரு நடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க - வெற்றைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்கும் வாழ்க - செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு - வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க சீரடியார் எல்லாம்.

**திருச்சிற்றம்பலம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# அருமைரெத்தினம் புவனேஸ்வரி
# அவர்களின்
# வரவாற்றின் சிறு துளி

யாழ்ப்பாணம் என்னும் குடா நாட்டில் ஊர் போற்றப்படும் நல்லூர் கந்தன் என அழைக்கப்படும் நல்லூர் என்னும் ஊரில் சங்கிலிய மன்னன் வணங்கிய வீரமாகாளியம்மன் என்னும் கோயில் கொண்டு எழுந்தருளி இருந்த இடம் தனிலே கந்தசாமி தெய்வானைப்பிள்ளை என்னும் நல்வாழ்வு வாழ்ந்த கார்கார கனகர் எனும் பட்டப்பெயர் பெற்ற இருவருக்கும் மூத்த புதல்வியாக வந்துதித்து புவனேஸ்வரி என்னும் பெயரை கொண்டார்.

அதன்பின் ஆறு ஆண் சகோதரர்களும் இரண்டு பெண் சகோதரரகளுக்குமான அருளானந்தம், சதானந்தம், நித்தியானந்தம், பரமானந்தம், குணரெத்தினம், செல்வரத்தினம் எனும் பெயரைக் கொண்டு இரு சகோதரிகள் இராஜேஸ்வரி, தவமணி என்னும் எட்டு உடன் பிறப்புக்களுடன் நலமுடன் வாழ்ந்து வந்த காலத்தில் அவரது பள்ளி படிப்பினை யாழ் லேடிஸ் கொலிச்சில் கற்று முடித்தார்.

அதன் பின் இளைய சகோதரர்களையும் தாயையும் தன் வீட்டு பணியையும் தானே பொறுப்பேற்று தன் இளைய சகோதரர்களையும் நல்லொழுக்கத்தின் வழிகாட்டியாக நடத்தி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் அவரது 27 வயதில் இல்லற பந்தத்தில் இணைப்பதற்கு புவேனஸ்வரியின் பெற்றோரும் இளைய சகோதரர்களும் தேடிய வேலையில் புங்குடுத்தீவு பதிகம் வாழ்தனில் வாழ்ந்து வந்த பொன்னையா பொன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனான அருமையான அருமைரெத்தினத்தை இல்லறவாழ்க்கைக்கு மணம் முகந்து தனது 28 வயதில் அவரை கைப்பிடித்தார். அந்த இல்லற வாழ்க்கையிலே அருமைரெத்தினம் புவனேஸ்வரி பெற்றெடுத்த மூத்த மகனாம் பிறேம்குமார் அவரை தொடர்ந்து ஐந்து பெண்பிள்ளைகளாகிய காஞ்சனாதேவி கமலாதேவி, கெங்காதேவி, கல்பனாதேவி ஐந்தாவதாக பெற்றெடுத்த அஞ்சனாதேவியுடன் நில்லாது கடைக்குட்டியாக கமலகுமார் என்னும் புதல்வனை இனிதே பெற்று வாழ்ந்து வந்தார்.

அவர்களது இல்லற வாழ்க்கையையும் இனிதே நிறைவேற்றி மருமக்களாக தருமாம்பாள், சிறிதரன், மகேஸ்வரன், தவானந்தன், உருத்திரன், தவகாந்த யோகேஸ்வரன், சிலக்ஸ்சி என்னும் கை கொண்ட மகிழ்ச்சியுடன் இருந்த வேளையில் பேரப்பிள்ளைகளாக ரூபிகா, துசிகா, லக்சன், லக்சிகா, யதுசன், சிறிநேருகா, நிருசன், சுவர்ணா, நதீஸ், பிரதீஸ், சதீஸ், டிலக்சிகா, துசியந்தன், நளினிகா, சுதர்சிகா, ரேவதி, தனுசன், சாருஜன், பிருத்திகா, கர்சிகா, அருஜன், அபிசன், தருண், தர்மிகா, அஜந் என பேரப்பிள்ளைகள் இருபத்தைந்தையும் மகிழ்வுடன் பார்த்துக் கொண்டு பேரப்பிள்ளைகளை கரம் பிடித்த நான்கு பேத்திகளின் இல்லற வாழ்க்கைக்கு இனிதா அமைந்த மனோச், தர்சன், டினேஸ், துசியந்தன் இவர்களின் வாழ்க்கையில் உதித்த முத்துக்களான பூட்டப் பிள்ளைகளான ரித்திக், ஐஸ்விக், ஆரியன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிகான், விகான், சர்விதா என ஆறு பூட்டப்பிள்ளைகளையும் இணைத்து இனிதே வாழ்ந்து வந்தார்.

அக் காலத்தில் வாழ்க்கை இடைகாலத்தை 1947 ம் ஆண்டில் கிளிநொச்சி உருத்திரபுரம் எள்ளுக்காடு என்னும் கிராமத்தில் இனிதே வாழ்ந்து வந்தார். 2001ம் ஆண்டு சுவீசில் வாழும் தனது பிள்ளைகளையும் மருமக்கள் பேரப்பிள்ளைகளையும் பார்ப்பதற்காக சுவீசுக்கு சென்று வந்த பின் வவுனியா சின்னப்புதுக்குளம் என்னும் கிராமத்தில் 18 வருடங்கள் வாழ்ந்து மக்களுடன் இனிதே பழகி வந்தார். தன்னுடைய கடைசிகால வாழ்க்கையை மீண்டும் தான் வசித்த இடத்திற்கே வந்து வாழ்ந்த வேளையில் 03.01.2020 அன்று கால எமன் அவரை அழைத்த வேளையில் அவரது வாழ்க்கை சரித்திரத்தை முடித்துக்கொண்டார்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் உள்ளக்குமுறல்

நடந்தவைகள் எல்லாம் ஞாபகத்தில் வருவதில்லை
தோள் சுமந்து தொட்டிலாட்டி பால் ஊட்டி பொழிந்த பாசம்
கால் நீட்டி கண்ணுருக்கம் கொண்ட போது
மேல் கொண்டு குத்திக் கிழித்து காயப்படுத்தியதே
அன்போடு அரவணைத்து வேண்டியதை வாரிக் கொடுத்து
மெய்யோடும் உளம் சோர்ந்து வெய்யோனின் வதைப்பட்டே

எமை வளர்த்து பாங்கதனை நினைத்தழுவோம் - என்றாலும்
தேற்றவே முடியவில்லை அவை நடுவே துரும்பாக
உற்றார் உறவுகள் எல்லோரும் - உங்கள் நிலை
நிற்பாரோ தெரியவில்லை ஒரு போதும்
வலி கொண்டு வந்தாலும் அம்மா எனின் அது போதும்
நிலையெடுத்து நிமிர்ந்து நின்று – நாளும்
வாழ்வளிக்க நினைக்கையிலே - உங்கள்
உயிர் பிரிந்து வலுவிலக்கச் செய்ததேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

எட்டாக் கனியாக எட்டிய எங்கள்
வட்டக் குடும்பத்தின் பொக்கிஷமே
பட்டி தொட்டியெல்லாம் நிலைத்திருந்து
காட்டிய பாசமும் பரிவும் என்றும்
கெட்டியாக எமக்குள்ளே நிலைத்திருக்க
நீங்கள் மட்டும் ஊர் சிறக்க மனம் நினைத்து
பார் சிறக்கச் சென்ற செயல் - பணி நின்று
பரமன் தான் செய்தானோ?

## சகோதரர்கள் புலம்பல்

வீடு விட்டு பிரிந்து வந்து இல்லறத்தில் இணைத்தாலும்
தொட்டபொழுதெல்லாம் எட்டி வந்து நின்றாயே!
பட்டதெல்லாம் ஒன்றாய் நின்று படிமுறையாய் - நீக்கி விட்டு
நாம் மட்டும் தனித்திருக்க நீ மட்டும் எங்கு சென்றாய்
வாழ்கின்ற எமக்கென்றும் வாழ்ந்த உன் வாழ்வுப்பாடம்
நீ வரைந்த வார்த்தைகள் காட்டி நின்ற பாதைகளும்
எந்நாளும் எம்மோடு நீ இருக்கும் ஆலயமாம்
போற்றுகின்றோம் சாந்தி பெறுக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

பாசம் பொழிந்த எங்கள் அப்பம்மா, அம்மம்மா!
எம்மில் அன்பு காட்டி நின்ற நீங்கள்
நோயோடு நாமிருந்தால் துடிதுடித்து
நொடிப்பொழுதில் சுகம் காக்கும் - உங்கள்
நோயறிந்து சுகம் போக்க முடியலயே!
கண்டிப்புடனே பலதும கற்றுத்தந்து
பண்புடனே எமை வளர்த்தீர்கள்.....
இன்று காணத் துடிக்கிறோம்.
எங்கு சென்றீர் எம்மைப் பிரிந்து
கனிவோடு எமைப்பார்த்து – என்றும்
பாசம் பொழிய மீண்டும் ஒளியொன்றாய் வருவீர்களென
வாசல் பார்த்து நிற்கின்றோம்.

## பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

பூட்டி என்று உண்டு என்று காதினிலே கூறியும்
படத்தினை காட்டியும் பாசமுடன் பூட்டியென்று
வளர்ந்து நாம் வந்து அழைப்பதற்குப்
பூவுலகை விட்டு பூ உதிர்ந்து
போனதென்று காதினிலே கேட்டவுடன் கதி
கலங்கி போய் விட்டோம்
பூட்டியென்று இனி யாரை
வாய் நிறைய அழைப்போமோ?....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் என்பதே அறிவு

1. பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தேன்.

2. படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்.

3. அன்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்.

4. பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்.

5. மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்.

6. பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்.

7. வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்.

8. இறப்பு என்பது யாதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்.

ஒவ்வொன்றையும் மனிதன் அனுபவித்தே தான் உணர வேண்டுமா? அனுபவித்தே தான் அறிவது வாழ்வெனில் ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்.

ஆண்டவன் சற்று அருகில் வந்து அனுபவம் என்பதே நான் தான் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 மணி நேரத்தில் உங்கள் உடல்...

உங்கள் இதயம் 103689 தடவை துடிக்கிறது.
உங்கள் ரத்தம் 168000000 மேல் ஓடுகிறது.
நீங்கள் 23040 தடவை சுவாசிக்கிறீர்கள்.
நீங்கள் 483 கன அடி காற்று உட்கொள்கிறீர்கள்
உங்கள் உடம்பிலிருந்து 1.42 பைண்ட் வியர்வை வெளிப்படுகிறது.
நீங்கள் 750 பெரிய தசை நார்களை இயக்குகிறீர்கள்.
நீங்கள் 4800 வார்த்தை பேசுகிறீர்கள்.
உங்கள் நகம் 0.00046 அங்குலம் வளர்கிறது
உங்கள் முடி 0.01714 அங்குலம் வளர்கிறது.
நீங்கள் 7000.000 மூளை அணுக்களுக்கு வேலை கொடுக்கிறீர்கள்.

## சிந்தனைச் சிறு துளிகள்

தீர்க்கமான சில முடிவுகள் திசைமாறும் போது தான் வாழ்க்கையில் பல திருப்பு முனைகள் ஏற்படுகின்றது.

முடிவுகளிற்கு இலட்சியங்களிற்கும் என்றுமே அடுத்தவன் போடுகின்ற முற்றுப்புள்ளிகள் தடையாக இருக்கக்கூடாது.

வருங்கால ஏக்கங்களிற்கு நிகழ்கால இலட்சியங்கள் என்றுமே நிற்கதியாகிப் போகக் கூடாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவக் குறிப்புக்கள்

1. வெந்நீரில் வேம்பு இலையைப் போட்டுக் குளித்தால் சொறி, சிரங்கு, ஒவ்வாமை, (அலர்ஜி) ஆகியன நீங்கும்.
2. கஸ்தூரி மஞ்சளை அரைத்துத் தடவி வந்தால் பருக்கள் மறைந்து போகும்.
3. எலுமிச்சம் பழச்சாற்றுடன் சம அளவில் துளசிச்சாறு சேர்த்து முகத்தில் தடவி வந்தால் தேமல் துரிதமாக மறைந்து விடும்.
4. காய்ந்த வேப்பிலையை ஒரு துணியில் சுருட்டி தானிய மூட்டையில் வைக்க தானியங்களில் வண்டு வராது.
5. வசம்பை சிறிது நீர் விட்டு மைபோல் அரைத்து தலையில் பூசி அரை மணி நேரத்திற்குப் பின் தலையை அலசினால் பேண்கள் மடியும்.
6. தீப்புண்களுக்கு முள்ளங்கியை அரைத்துப் போட்டால் நீர் வடிவது நின்று விடும். உள் காயமும் ஆறிவிடும்.
7. குளிர்ந்த நீரில் மெலிதான துணியை நனைத்துப் பிழிந்து நெற்றியில் ஒற்றியெடுக்க அதீதமான ஜீரம் படிப்படியாகக் குறையும்.
8. பெண்களுக்கு அகத்திக்காய் மிகவும் பயன்தரக்கூடியது. இதை எப்போதும் உண்ணலாம். கர்ப்பப்பைக் கோளாறுகள், வெள்ளைப்படுதல் போன்றவற்றிற்கு அரிய மருந்து.
9. தேங்காய் உடல் உஷ்ணத்தைக் குறைத்து உள்ளுறுப்புக்களின் புண்ணை ஆற்ற வல்லது. அதிக அளவில் பயன்படுத்தக்கூடிய அற்புதமான காய் இது.
10. சின்ன வெங்காய சாற்றை தலையில் தடவினால் பொடுகு போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்

1. ஐயனார் சுய உதவிக்குழு, உருத்திரபுரம்
2. ரகு பல்பொருள் வாணிபம், உருத்திரபுரம்
3. வெற்றி ஜிம், உருத்திரபுரம்
4. கிளி, முல்லைசாலை உரிமையாளர் (நடத்துனர், சாரதிகள்)
5. சீபான் மோட்டர்ஸ் - வவுனியா
6. சிக்கன கடன் உதவி கூட்டுறவு சங்கம், உருத்திரபுரம்
7. (வி.என்.ஏச்) அழகுப் பிள்ளையார் - கொங்கிறிற் பொருட்கள் உற்பத்தி, விற்பனை நிலையம்
8. வவுனியா மாவட்ட தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கம் - வவுனியா
9. மகேந்திரன் குடும்பம் (பெரிய தம்பி)
10. உருத்திரபுரம் விளையாட்டு கழகம், சனசமூக நிலையம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய் திகழ்ந்து எமையெல்லாம் ஏங்கவிட்டு இறைபதம் எய்திய எங்கள் குடும்பத்தெய்வம் அமரர் திருமதி.அருமைரெத்தினம் புவனேஸ்வரி அவர்களின் பிரிவு செய்திக் கேட்டு ஆறாத்துயரில் இருந்து எம்முடன் கலந்து கொண்ட உற்றார் உறவினர்கட்கும் பெரியோர்களுக்கும். நண்பர்களுக்கும் அவரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கும். தொலைபேசி, முகப்புத்தகம், வைபர், வட்ஸ் அப் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியக் கிரியைகளில் பங்கு பற்றிய அனைவருக்கும் மற்றும் பல வழிகளிலும் அன்னாரின் மீது அன்பு கொண்டு எமக்குத் துணை நின்று அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

- ★ கந்தசாமி + ★ தெய்வானைப்பிள்ளை
- ★ பொன்னையா + ★ பொன்னம்மா

- ★ புவனேஸ்வரி — அருமைரெத்தினம் ★
- ★ அருளானந்தம் + தனலட்சுமி
- ★ சதானந்தம் + நாகேஸ்வரி
- ★ நித்தியானந்தம் + கனகாம்பிகை
- ★ பிரமானந்தம் + கமலாம்பிகை
- குணரட்ணம் + சிறிவதனி
- செல்வரட்ணம் + மாசிலாமணி
- இராஜேஸ்வரி + அரியகுமார்
- தவமணி + தெய்வேந்திரம்

- பூமணி கனகசுந்தரம் ★
- அருமைரெத்தினம் ★
- சிவபாதசுந்தரம் வள்ளியம்மை ★

**பிரேம்குமார் + தாமாம்பாள்**
- ரூபிகா + மனோஜகுமார்
  - ரித்திக்
  - யஸ்விக்
- துஷிகா
- லக்ஷன்
- கைஷிகா
- யதுரஷன்

**காஞ்சனாதேவி + ஸ்ரீதரன்**
- நேருகா + தர்ஷன்
  - ஆரியன்
  - விஜானன்
  - ரிஹானன்
- நிருஷன்

**கமலாதேவி + மகேஸ்வரன்**
- சுவர்ணா + முகுந்தன்
  - சரவிதா
- நதீஷ்
- பிரதீஷ்
- சதீஷ்
- முலக்ஷனா
- துஸ்யந்தன்

**கெங்காதேவி + தயானந்தம்**
- நளினிகா + துஷ்யந்தன்
- சுதர்ஷிகா
- ரேவதி
- தருஷன்
- சாருகன்

**கமலகுமார் + சிவக்ஷி**
- தர்மிகா
- அஜந்

**அஞ்சனாதேவி + தவகாந்தன் யோகேஸ்வரன்**
- அபிஷனா
- தருணா

**கல்பனாதேவி + உருத்திரன்**
- பிருத்திகா
- கர்சிகா
- அருஜன்

★ அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.





"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

பொய்கை பதிப்பகம். வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org